*(வலைப்பின்னல் மாற்றும்முறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நீர்வளச் சபை (திருத்தச்) சட்டம்*

---

[*1999, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6. 50** **தபாற் செலவு : ரூபா 3. 50**

## *1999 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நீர்வளச் சபை (திருத்தச்) சட்டம்*

[*1999 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ 27/98.*

### *1964 ஆண்டின் 29 ஆம் இலக்க நீர்வளச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நீர்வளச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத் தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நீர்வளச் சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது* :-

*"சபையின் கடமைகள்.*

***12.****(1) பின்வரும் கருமங்கள் மீதும் அமைச்சரினால் ஆலோசனைக்கென சபைக்கு ஆற்றுப் படுத்தப்படும் வேறேதேனும் கருமத்தின் மீதும் அமைச்சருக்கு ஆலோசனையளித்தல் சபையின் கடமையாதல் வேண்டும்* :-

*(அ) நாட்டின் நீர்வளங்களைப் பேணிக் காத்தலும் பயன்படுத்துதலும் உட்பட அவற்றைக் கட்டுப்படுத்துதலும் ஒழுங்கு படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்* ;

*(ஆ) ஆறுகள், அருவிகள் மற்றும் வேறு நீர் வளங்களின் தீழ்ப்பைத் தடுத்தல்* ;

*(இ) நாட்டின் நீர்வளங்களை, பின்வரும் குறிக் கோள்களைக் கருத்திற்கொண்டு, கட்டுப் படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பில் தேசிய கொள்கைகளைத் தொகுத்தமைத்தல* :-

;

(i) *நீர்வளங்களின் பலநோக்கு அபி விருத்தியும் பயன்பாடும்* ;

(ii) *வீட்டுத்தேவை வழங்கல்களுக்கும், கைத்தொழில் தேவை வழங்கல் களுக்கும் நீர்வளங்களின் குறுகியகால மற்றும் நீண்டகால ஏற்பாடு* ;

H - 022545

;

(iii) உவர்ப்பைக் கட்டுப்படுத்துதல் ;

(iv) இவை போன்ற வேறு எவையேனும் குறிக்கோள்கள் ;

(ஈ) நாட்டின் நில நீர்வளங்களைப் பேணிக் காப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், கட்டுப் படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற் குமான விரிவான ஒன்றிணைக்கப் பட்ட திட்டங்களைத் தயாரித்தல் ;

(உ) நீர்ப்புவிச்சரிதவியல் தொடர்பான அடிப் படைத்தரவின் அளவீடுகள் சம்பந்தமாக வும் வேறு நுண்ணாய்வுகள் சம்பந்தமாகவும் அரசாங்கத் திணைக்களங்களினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினதும் செயற்பாடு களை ஒருங்கிணைத்தல் ;

(ஊ) அரசாங்கத் திணைக்களங்களினாலும், உள்ளூரதிகாரசபைகளினாலும், பகிரங்க கூட்டுத்தாபனங்களினாலும் நாட்டின் நில நீர்வளங்கள் தொடர்பில் செய்யப்பட்ட நுண்ணாய்வுகளையும் புள்ளிவிபர அளவைகளையும் திட்டங்களையும் பிரே ரணைகளையும் அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகளின் பகுப்பாய்வு ;

(எ) நாட்டின் அடிநில நீர்வளங்களைப் பேணிக் காத்தல், பயன்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பாக அரசாங்கத் திணைக்களங்களினாலும் உள்ளூரதிகார சபைகளினாலும், பகிரங்கக் கூட்டுத் தாபனங்களினாலும் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களை இயைபுபடுத்துதலும், அத்தகைய கருத்திட்டங்களின் இயலுமாந் தன்மைகளையும் நன்மைகளையும் பொரு ளாதாரச் சாத்தியக்கூறுகளையும் மதிப் பீடுசெய்தலும் ;

(ஏ) நில நீரைத் தகுந்த முறையில் கட்டுப் படுத்துவதற்கும், சிக்கனமாகப் பயன் படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் எடுக் கப்படவேண்டிய வேறு எவையேனும் பொருத்தமான வழிவகைகள்.

(2) சபையானது, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் மீது அமைச்சருக்கு ஆலோசனை அளிப்பதற்கு அவசியமான தரவுகளையும், தகவலையும் அது திரட்டுவதனை இயலச் செய்யக்கூடியவாறான அத்தகைய நுண்ணாய்வுகளையும், அளவைகளையும் பொறுப்பேற்கலாம்.

(3) சபையானது, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் பயனுறச் செய்வதனை அதற்கு இயலச் செய்கின்றவாறான அத்தகைய வேறு செயற்பாடுகளை கொடுப்பனவுக்காகவோ அல்லது வேறுவகையாகவோ, நிறைவேற்றலாம். சபை மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளுள் பின்வருவன அடங்குதல் வேண்டும் :-

(அ) நில நீர்வளங்கள் கிடைப்பதைப் பற்றிய சாத்தியக்கூறு சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ;

(ஆ) ஆழமான குழாய்க்கிணறுகளுக்கும் கமத்தொழிற் கிணறுகளுக்குமான நில நீர்நிலைகளை இனங்காண்பதற்கு நீர்ப்புவிச்சரிதவியல் நுண்ணாய்வுகளை மேற்கொள்ளுதல் ;

(இ) வீட்டுபயோக, கமத்தொழில், கைத்தொழில் நோக்கங்களுக்கு நிலநீரை ார்த்தெடுப்பதனை இயலச்செய்வதற்கு விஞ்ஞான ரீதியிலான முறையொன்றில் குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல் ;

(ஈ) உப மேற்பரப்புப் படலத்தைப் புலனாய்வு செய்வதற்கு துளைத் துவாரங்களைத் துளைத்தல் ;

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) "நீர் வளச்சபைக்கான திணைக்களங்களுக்கிடை மதியுரைக்குழு" என அழைக்கப்படவேண்டிய, (இது இதனகத்துப்பின்னர் "மதியுரைக்குழு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பின்வருவோரைக்கொண்ட குழுவொன்றிருத்தல் வேண்டும் :-

(அ) நீர்வளச் சபை எந்த அமைச்சருக்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஆ) நீர்வளச்சபை எந்த அமைச்சருக்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ;

(இ) சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச் சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஈ) சுதேச வைத்தியம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள் ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) உள்ளூராட்சி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள் ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஊ) மாகாணசபைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள் ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(எ) நீர்ப்பாசனப் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(ஏ) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரச் சபைத் தவிசாளர் ;

(ஐ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவீட்டு, சுரங்கங்கள் பணியகத்தின் தவிசாளர் ;

(ஒ) கமத்தொழிற் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(ஓ) காணி ஆணையாளர் ;

(ஔ) நில அளவையாளர் தலைமை அதிபதி ;

(க) கமநலச் சேவைகள் ஆணையாளர்;

(ங்) தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப் பாளர் தலைமை அதிபதி ;

(ச) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர்வழங்கல், வடிகால்சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல், வடி கால்சபைத் தவிசாளர் ;

(ஞ) காடு பேணலதிபர்

(ட) 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தவிசாளர் அல்லது அவரது நியமத்தர் ;அத்துடன்

(ண) இலங்கை புகையிரத பொது முகாமை யாளர்"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஐந்நூறு ரூபாவிலான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாவிலான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) "உள்ளூரதிகாரசபை" என்னும் சொல்லின் வரை விலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரை விலக்கணத்தை இடுவதன்மூலம்

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருளாவதுடன் ஏதேனும் அத்தகைய சபையால் அல்லது ஏதேனும் பிரதேசசபையால் பிரயோகிக்கப்படும், தத்து வங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவை போன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறை வேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற் கெனவும் ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;" அத்துடன்

(ஆ) "உள்ளூராட்சிச் சேவை" என்பதன் வரைவிலக்கணத்தில் "உள்ளூராட்சிச் சேவைச் கட்டளைச் சட்டத்திலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்திலுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

*பிரதான சட்ட வாக்கத்தின் குறித்த சில எற்பாடுகளைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கம், இச்சட்டத்திற்கான அட்டவணையின் நிரை 1 இல் குறித்துரைக்கப்பட்ட எற்பாடுகளில், அவ்வட்டவணையின் நிரை 11 இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொல்லுக்கு அல்லது சொல்லமைப்புக்குப் பதிலாக அவ்வட்டவணையின் நிரை 111 இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொல்லை அல்லது சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை எற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

| அட்டவணை | | (பிரிவு 6) |
|---|---|---|
| *நிரை 1* | *நிரை 111* | *நிரை 111* |
| 4 (5) | இலங்கை | இலங்கை |
| 5 (2) | இலங்கை | இலங்கை |
| 9 (2) | திறைசேரிச் செயலாளர் | பொது நிர்வாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| 11 | இலங்கை | இலங்கை |
| 13 | இலங்கை | இலங்கை |
| 14 (4) | நிாந்தரச் செயலாளர் | நீர்வளச் சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் செயலாளர் |
| 14 (5) | நிரந்தரச் செயலாளர் | நீர்வளச் சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| 17 (3) (இ) | மூதவை மற்றும் பிரதிநிதிகள் சபை | பாராளுமன்றம் |
| 19 (1) | மூதவை மற்றும் பிரதிநிதிகள் சபை | பாராளுமன்றம் |
| 19 (3) | மூதவை மற்றும் பிரதிநிதிகள் சபை | பாராளுமனறம் |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*